R.N.I.No.TNTAM/2000/3629, Postal Registration No.DDL/19/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
September 2018



**வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையில் புதிதாக பிறந்தவர்கள்**

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.15 P.M & Our TV Program: Nambikkai TV Every Saturday 8.00 P.M & Tamilan TV Every Thursday 6.00 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*
*Office Address*
*The Word of Christ, D/5 Rajan Nagar*
*Batlagundu -624202, DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

**To**

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 18 | செப்டம்பர் 2018 | கனி 10

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16**

***THE WORD OF CHRIST***

ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:15 - 5:30 pm on 31 meter band on Sri Lanka radio.

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.

**Rajanayagam in Tamil:**
Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.

World Evangelism Gospel Media


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 217

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேரும்போது, அந்த ஜாதிகள் செய்யும் எவைகளின்படி செய்யக் கற்றுக்கொள்ளவேண்டாம் என கர்த்தர் எச்சரித்தார்?
2. ஆபிரகாமின் கையில் தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தவன் யார்?
3. உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, எவரைச் சேவியுங்கள் என்று யார் சொன்னது?
4. உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் அவன் யாரிடத்தில் கேட்கக்கடவன்?
5. ஜனங்கள் எந்த தீர்க்கதரிசியின் சொல்லைக் கேட்க மனதில்லாமல் அப்படியல்ல, எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும் என்றார்கள்?
6. தீமைக்கு தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல் அற்குப் பதிலாக, என்ன செய்யவேண்டும்?
7. சாலமோனுக்கு நாத்தான் தீர்க்கதரிசி இட்ட பெயர் என்ன?
8. நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர என்னவாயிருக்கிறோம்?
9. எவனுடைய சந்ததியாரில் பட்டணத்திலே சாகிறவனை நாய்கள் தின்னும் வெளியிலே சாகிறவனை ஆகாயத்தின் பறவைகள் தின்னும் என்று கர்த்தர் உரைத்தார்?
10. நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சிகொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன் என எழுதும் அப்போஸ்தலன் யார்?

## வேதாகம ஆய்வு... 2

**அகாஸ்வேரு (சிங்கம் போன்ற ராஜா)**
**Ahasuerus**

இந்தப் பெயர் மேதிய ராஜாவுக்கும், இரண்டு பெர்சிய ராஜாக்களுக்கும் உபயோகிக்கப்பட்டது.



1. தானி.9:1−ல் சொல்லப்பட்ட இவன் தரியுவின் தகப்பன். இவன் நினிவேயைக் கைப்பற்றி அதை (கி.மு.634) பெரிய பட்டணமாக்கினான்.
2. எஸ்றா 4:6−ல் சொல்லப்பட்ட இவன் பெர்சிய ராஜா (கி.மு.529) இவன் கோரேசின் மகனாயிருக்கலாம்.
3. எஸ்தர் 1:1−ல் சொல்லப்பட்ட இவன் (கி.மு.485) வஸ்தி என்ற ராஜாத்தியை தள்ளிவிட்டு எஸ்தரை ராணியாக்கினான். இவன் இந்தியா முதல் எத்தியோப்பியா வரை 127 நாடுகளை அரசாண்டான்.

சிறுவர் பகுதி

# உலர்ந்த எலும்புகள் உயிரடையுமா?

வேதவாசிப்பு: எசேக்கியேல் 37:1-13



எலும்புக்கூடு பார்த்திருக்கிறீர்களா? பள்ளி ஆய்வுக்கூடத்தில் பார்த்து இருப்பீர்கள். அம்மாதிரியான உலர்ந்துபோன எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவிலே எசேக்கியேல் தீர்க்கதரிசியை கர்த்தர் கொண்டு போனார். நீங்களா இருந்தா, பார்த்து பயந்து போயிருப்பீங்க. எசேக்கியேல் தீர்க்கதரிசியை அந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கை சுற்றி நடக்கப்பண்ணினார். பின்பு, மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு எசேக்கியேல்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றான்.

அப்பொழுது கர்த்தர் நீ இந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து அவைகளைப் பார்த்து உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.நான் உங்கள்மேல் நரம்புகளைச் சேர்த்து, உங்கள் மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத்தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன் அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்களென்று உரைக்கிறார் என்று சொல் என்றார். அந்தப்படியே எசேக்கியேல் சொல்ல ஒரு இரைச்சல் உண்டாகி ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்து அவர்கள் உயிரடைந்து காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.

இஸ்ரவேலருக்கு பாடம் புகட்டவே கர்த்தர் இவ்விதமான காரியத்தை எசேக்கியேலுக்கு முன்பாக நடப்பித்தார். நம்மில் அவிசுவாசமுள்ளவர்களாக இருப்பவர்களுக்கும் இது பாடமாக அமையும். இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்கிறார்கள். நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும்பண்ணுவேன். அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் என்றார். செத்து நாலு நாட்களான லாசருவை நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கல்லறையிலிருந்து எழுப்பினார் அல்லவா?

இந்த இஸ்ரவேலர்களைப் போல எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று, எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று, நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்று அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். உலர்ந்து போன எலும்புக்கு உயிர் கொடுக்கும் தேவன் நம் கர்த்தர். அவர்மீது அசையாத நம்பிக்கை வைக்க வேண்டும். வைப்பீர்களா!

**மனப்பாட வசனம்**

**“என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்” – எசேக்கியேல்37:14**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 18 செப்டெம்பர் -2018 கனி - 10


ஆசிரியருரை

## தேவன் நம்மோடிருக்க நாம் செய்யவேண்டுவதென்ன?

## What Should We Do To God Be With Us?




அநேகர் தேவன் தன்னோடிருக்கவேண்டுமென்று விரும்புகின்றனர். ஆனால் தேவன் எதிர்பார்க்கிறபடி தங்களுடைய வாழ்க்கையை மாற்றியமைத்துக்கொள்வதில்லை. தேவனுடைய விருப்பத்தை நாம் செய்யும்போது தேவன் நம்மோடிருந்து நம்மை வழிநடத்துவார். இது குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதிய கடிதத்தில் வாசிக்கிறோம். "சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" என்கிறார் (பிலி.4:8).

**முதலாவது, உண்மையுள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** உண்மையான காரியங்கள் எவைகளோ அவைகளையே நாம் அதிகமாக சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டும். பொதுவாக ஜனங்கள் எப்படியோ வாழ்ந்தால் போதும் என நினைத்து, காலத்தை கடத்திக்கொண்டு, நமக்கேன் வம்பு ஊரோடு ஒத்துப்போய்விடுவோம் என்று அது சரியா தவறா என்பதை குறித்து யோசிக்காமல் மற்றவர்களைப்போலவே நடந்துகொள்வார்கள். அன்பானவர்களே, நாம் தேவனுக்குப்பிரியமானவர்களாக இருக்கவேண்டுமானால் அல்லது தேவன் நம்மோடிருக்கவேண்டுமானால் நாம் உண்மைக்குச் செவிகொடுக்கவேண்டும் அவைகளைக்குறித்து சிந்திக்கவேண்டும். பவுல் உண்மையாயிருந்தபடியால் அவருக்கு இந்த ஊழியம் கொடுக்கப்பட்டதாக எழுதுகிறார்; "என்னை பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னைப் உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்" என்கிறார் (1தீமோ.1;12). நாம் உன்மையுள்ளவர்களாக இருக்கும்போது அவருடைய நாமம் மகிமைக்காக எடுத்துப்பயன்படுத்தப்படுவோம்.

**இரண்டாவது, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** ஒழுக்கம் முதலாவது வீட்டிலும் பின்பு பள்ளியிலும் நமக்கு கற்றுக்கொடுக்கப்படுகிறது. இந்த ஒழுக்கத்தை கடைபிடிக்கிறவர்கள் எத்தனைபேர். ஒழுக்கங்கெட்டு நடப்பதாலே அநேகபிரச்சனைகள் ஏற்படுகிறது. பவுல் ஒழுக்கங்கெட்ட சிலரைக்குறித்து எழுதும்போது; "நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன்

விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக் காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக் காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்ட வனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது" என்பதாக எழுதுகிறார் (1கொரி.5:11). இப்படிப்பட்டவர்களோடு கையோடு கைகோர்த்து பழக்கம் வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் வேதாகமம் நமக்கு போதிப்பது என்ன? இப்படிப்பட்ட சகோதரர்கள் இருந்தால் அவர்களோடு கலந்திருக்கக்கூடாது அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது. நாம் இப்படிச் செய்யும்போது அவர்கள் மனந்திரும்ப வாய்ப்பு ஏற்படும். இல்லையேல் தங்களுடைய தவறிலே அவர்கள் நிலைத்திருப்பார்கள்.

**மூன்றாவது, நீதியுள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** நீதி தவறி ஒரு வழக்கு தீர்க்கப்பட்டுவிட்டால் நாம் எவ்வளவு தூரம் வேதனைப்படுகிறோம். நீதி தவறிவிட்டார்கள். நடந்ததை மூடிமறைத்துவிட்டார்கள் என ஆவேசப்படுகிறோம். இப்படி ஆவேசப்படுகிற நாம் நீதியாக நடக்கவேண்டும். அதையே வேதாகமம் நம்மில் எதிர்பார்க்கிறது. நீதியுள்ளவன் உண்டோ என தேவன் பூமியின் மேல் கண்ணோக்கமாயிருக்கிறார். "நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க" என படிக்கிறோம் (2பேது.2:8). நாம் நீதியாய் நடக்கும்போது லோத்தை இரட்சித்த கர்த்தர் நம்மையும் இரட்சிப்பார்.

**நான்காவது, கற்புள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** கற்பு என்பது மிகவும் முக்கியமானது. கலப்படமற்றது, தூய்மையானது, புனிதமானது. நாம் பெற்றுக்கொண்ட கற்பனை கலப்படமற்றது, தூய்மையானது, அது புனிதமானதும் கூட. இவைகளைப்போல நம்முடைய வாழ்க்கையும் புனிதமானதாக இருக்கவேண்டும். பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடையும்படியாக ஒவ்வொருநாளும் முயற்சிக்கவேண்டும். அவைகளையே சிந்தித்துக்கொண்டு மேலானவைகளை நாடுங்கள். "ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்" (1தீமோ.5:22). பாவம் பலவழிகளில் மனிதனை தொடர்கிறது. நீங்கள் தேவனுக்குப்பிரியமானவர்களாக இருக்கவேண்டுமானால்; நீங்கள் முதலவாது உங்களை சுத்தவான்களாக அதாவது கற்புள்ளவர்களாக பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**ஐந்தாவது, அன்புள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** அன்பு, அன்பு என்று எங்கும் எப்பொழுதும் பேசப்பட்டு வருகிறது. அன்பு என்று சொல்லக்கூடிய இந்த மூன்று எழுத்தில் தேவனுடைய பிரமாணம் முழுமையுமாக உள்ளது என்பதை அறிவீர்களா? "உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்" (யாக்.2:8). அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் மற்றவர்களிடம் அன்பு செலுத்தும்போது தேவனுடைய பிரசன்னம் அங்கே





# வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்

**வேத அறிவுப்போட்டி**
**எண் 214 ல் வெற்றிபெற்றவர்கள்**

46. R.அந்தோணியம்மாள்- கலுங்குவிளை
47. S.ஜாய் சந்திரகாந்தா - நெல்லூர்
48. M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
49. E.அதிசயம் - விருதுநகர்
50. E.ஜாய்ஹெலன்புனிதா - சென்னை
51. Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
52. Mrs.பாலின்மார்ட்டின் - சிவகங்கை
53. Mrs.ருக்மணிஜெயசீலி - தேனி
54. Mrs.ஜேதிமணி - ஸ்ரீவில்லிப்புத்தூர்
55. D.ஞானதீபம் ஜெபராஜ் - திருநெல்வேலி
56. T.ஏஞ்சலின்நேசமலர் - சாஸ்தாபுரம்
57. J.செல்வராஜ் - புதியம்புதூர்
58. J.ஜாய்ஸ்கமலம் - நாசரேத்
59. Mrs.சரோஜினிமோசஸ் - திருநெல்வேலி
60. Mrs.நவரத்தினம் - நாசரேத்
61. Mrs.ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
62. S.A.சாமுவேல் - பரமத்தி
63. Mrs.ரூபவல்யா - நாசரேத்
64. Mrs.எபிநேசர்எட்வேர்ட் - கடலூர்
65. Mrs.சாந்தாபழனி - தருமபுரி
66. Mrs.பிளசின்கிலாடினா - சென்னை
67. S.விஜிலா - நாசரேத்
68. Mrs.ஜெயமணி ராஜம்மாள்- கடலூர்
69. Mrs.தேவதாதேவப்பிரியம் - சென்னை
70. Mrs.கெத்சிசெல்வின் - சென்னை
71. Mrs.அன்னம்மாள் - தூத்துக்குடி
72. Mrs.இந்திராஜெபக்கனி - நாசரேத்
73. G.பூங்கோதை - கோபி
74. C.மனோகரன் - நாமக்கல்
75. G.நிர்மலாவின்செண்ட் - திருப்பூர்
76. R.கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
77. Mrs.சுசிலாராஜசிங் - வள்ளியூர்
78. N.ஜெபத்தாய் - நாசேரேத்

## வாசகர் கடிதம்...

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அர்ஜீனன் ஐயாவுக்கு எனது பணிவான வணக்கம். ஒருவழி பாடத்தை முடித்து அனுப்புகிறேன். தாங்கள் மாதம் தோறும் அனுப்பும் "தீவேர்ட் ஆப் கிரைஸ்ட்" என்ற மாத இதழ் தவறாமல் எங்களுக்கு கிடைக்கிறது ஆவிக்குரிய போதகம் கிடைக்காத இந்த தரித்திரமான இடத்தில் தங்களின் மாத இதழ் ஆவிக்குரிய தரமான போதகத்தை கொண்டு வருகிறது அதில் உள்ள ஒவ்வொரு செய்தியும் பரிசுத்த ஆவியானவர் எங்களோடு பேசுவது போலவே உள்ளது. இதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தொடர்ந்து ஜெபத்தில் ஒருவரையொருவர் தாங்கிக்கொள்வோம் கர்த்தர் தாமே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**என்றும் கிறிஸ்துவின் பணியில்,**
**I.அருள்**
**பாளையங்கோட்டை**

**வேத அறிவுப்போட்டி**
**எண் 215 ல் வெற்றிபெற்றவர்கள்**

38. Mrs.சாந்தாபழநி - தருமபுரி
39. Mrs.ரூபிஜெயசேகர்- கலுங்குவிளை
40. K.M.சாந்தி - வாடிப்பட்டி
41. A.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
42. S.R.பெரியசாமி - சேலூர்
43. S.A.சாமுவேல் - பரமத்தி
44. S.சாந்தகுமாரி - நாசரேத்
45. G.பூங்கோதை - கோபி
46. J.ஜாய்ஸ்கமலம் - நாசரேத்
47. Mrs.ராஜம்மாள் - சென்னை
48. Mrs.எபிநேசர் எட்வேர்ட் - கடலூர்
49. Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
50. M.ராமசந்திரன் - ஒட்டநத்தம்
51. Sis.கஸ்தூரி - ஒட்டநத்தம்
52. N.ஜெபத்தாய் - நாசரேத்
53. Mrs.ரூத்ஜெயமணி - திருநெல்வேலி
54. Mrs.கெத்சிசெல்வின் - சென்னை
55. Mrs.தேவபுஸ்பம் - நாசரேத்
56. Mrs.ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
57. J.விக்டர்சுவிசேஷமுத்து - ஆனந்தபுரம்
58. K.பாலம்மாள் - தூத்துக்குடி
59. R.ஸ்டெல்லாஇளமதி - திருப்பூர்
60. B.ஸ்டெல்லாம்மாள் - கூத்தூர்
61. Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
62. Mrs.இந்திராஜெபக்கனி - தூத்துக்குடி
63. T.ஏஞ்சலின்நேசமலர்- கன்னியாகுமரி
64. S.தங்கம் - கன்னியாகுமரி

**வேத அறிவுப்போட்டி**
**எண் 214 ன் விடைகள்**

1.தானியேல் - தானி.2:30
2. மனுஷகுமாரன் மேகங்கள்மேல் வரும் நாள் - மாற்.13:22
3. ஓசியா - ஓசி.5:15
4. ஆம் - லூக்.17:4
5. ஆமோஸ் - ஆமோ.8:12
6. தோமா - யோ.20:27
7. யோனா - யோனா2:1
8. இல்லை - அப்.2:34
9. சீயோன் குமாரத்திக்கு - மீகா4:13
10. ஆம் - ரோம.5:4

**வேத அறிவுப்போட்டி**
**எண் 215 ன் விடைகள்**

1. கர்த்தருடைய - நாகூ.1:3
2. கிறிஸ்பு, காயு - 1கொ.1:15
3. கர்த்தரை - ஆபகூ.3:10
4. பவுல் - 2கொரி.7:9
5. தண்டிப்பார் - செப்.1:12
6. நீதியாக - கலா.3:6
7. கர்த்தரின் ஆலயத்திலே - ஆகா.1:14
8. அப்போஸ்தலனாகிய பவுல் - எபே.3:3
9. எருசலேமின் - சகரி.8:4
10. பவுல் - பிலி.3:7

**வேத அறிவுப்போட்டி**
**எண் 214 ல் வெற்றிபெற்றவர்கள்**

1.S.தங்கம் - கன்னியாகுமரி
2.Mrs.ஞானம்பிலிப் - கோவை
3.Mrs.வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
4.D.அன்புக்கமலம் -சிவகங்கை
5.P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
6.R.கஸ்தூரி - தூத்துக்குடி
7.T.ராஜாத்தி - கோம்பை
8.K.ராணி - தூத்துக்குடி
9.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
10.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
11.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
12.Mrs.ஆலிஸ்குணசீலி - வைகுண்டம்
13.Tmt.மரகதம் - கோம்பை
14.A.டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
15.Mrs.பிரமிளாரேவதி - கோவை
16.Mrs.ஃபுளோராசுந்தர் - மதுரை
17.Mrs.பால்டேனியேல் - சென்னை
18.S.லதா - தேனி
19.Mrs.ஆலிவ் ஜெயபாலன் - கோவை
20.D.சாந்தாதேவி - கோவை
21.Mrs.மேரி நிர்மலா - கோவை
22.Mrs.ரத்னாபாய்பிரசாத் - மதுரை
23.Mrs.பியூலாஜெசுராஜன் - புதுச்சேரி
24.K.M.சாந்தி - வாடிப்பட்டி
25.R.ஞானசிரோன்மணி - மதுரை
26.S.R.பெரியசாமி - சேலூர்
27.Mrs.ஜெயாமேரிதாய் - திண்டுக்கல்
28.Mrs.தேவபுஸ்பம் - தூத்துக்குடி
29.Mrs.ரெஜினா - நாசரேத்
30.M.மங்களம் - நாசரேத்
31.A.மேரிஆசீர்வாதம் - நாசரேத்
32.S.சாந்தாகுமாரி - நாசரேத்
33.R. ஜெபகனிமார்க்ஸ் - விருதுநகர்
34.Mrs.ஃபிரங்கலினாஜான் - ஊட்டி
35.Mrs.அல்லிராணிகாட்வின் - சென்னை
36.Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
37.J.விக்டர்சுவிசேஷமுத்து - தூத்துக்குடி

**வேத அறிவுப்போட்டி**
**எண் 215 ல் வெற்றிபெற்றவர்கள்**

1.R.ஜெபக்கனிமார்க்ஸ் - கூமாபட்டி
2.J.ரேச்சல் தமிழரசி - பசுமலை
3.R.ஞானசிரோன்மணி- - சமயநல்லூர்
4.Mrs.வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி
5.A.டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
6.Mrs.ஜெமிநெல்லையா - கோவை
7.Mrs.பாலின்டேனியேல் - சென்னை
8.R.அந்தோனியம்மாள் - கலுங்கவிளை
9.Mrs.ருபவல்யா - தூத்துக்குடி
10.D.அன்புக்கமலம் - காரைக்குடி
11.Mrs.பாலின்மார்ட்டின் - காரைக்குடி
12.Mrs.ஞானம்பிலிப் - கோவை
13.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
14.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
15.Mrs.ரத்னாபாய்பிரசாத் - மதுரை
16.Tmt.மரகதம்திரவியம் - கோம்பை
17.Mrs.மேரிநிர்மலா - மதுரை
18.K.ராணி - தூத்துக்குடி
19.Mrs.ஃபுளோராசுந்தர் - மதுரை
20.E.ஜாய்ஹெலன்புனிதா - சென்னை
21.Mrs.நவரத்தினம் - தூத்துக்குடி
22.Mrs.தேவதாதேவப்பிரியம் - சென்னை
23.R.கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
24.K.S.மாணிக்கவாசகம் - தூத்துக்குடி
25.G.நிர்மலாவின்சென்ட் - திருப்பூர்
26.J.ஆலிவ் - கோவை
27.Mrs.ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
28.Mrs.ஃபிரமிளாஜான் - ஊட்டி
29.S.ஜாய்சந்திரகாந்தா - நெல்லூர்
30.Mrs.ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
31.Mrs.அல்லிராணிகாட்வின் - சென்னை
32.J.செல்வராஜ் - தூத்துக்குடி
33.Mrs.ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
34.P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
35.S.அன்னம்மாள் - தூத்துக்குடி
36.Mrs.ஜெயாமேரிதாய் - திண்டுக்கல்
37.D.சாந்தாதேவி - தேனி



இருக்கும். தேவனும் நம்மோடிருப்பார். அன்பினால் அநேக நன்மைகள் உண்டாகும். அன்பை பெற்றுக்கொள்ள அன்பின் ஆண்டவர் இயேசுவின் பாதம் அமர்ந்து கற்றுக்கொள்ளுங்கள்.

**ஆறாவது, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ என குறிப்பிட்டுள்ளார்.** நலமான காரியங்களை செய்கிறோம் என்று சொல்லி அநேகர் தொண்டு நிறுவனங்களை துவக்குகிறார்கள். வேதாகமத்திலே அநேக நலமான காரியங்களை நாம் காணலாம். "யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையில் தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள்" (அப்.9:36). இவள் எதற்காக இப்படிச் செய்துகொண்டு வந்தாள். இவள் ஒரு தேவனுடைய மனுஷி ஆகையால் இவள் நன்மைசெய்வதை தன்னுடைய நோக்கமாக கொண்டு மற்றவர்களுக்கு உதவி செய்துகொண்டும், தருமங்களை செய்துகொண்டும் வந்தாள். நீங்கள் ஒரு தேவனுடைய மனுஷனாக அல்லது மனுஷியாக இருப்பீர்களானால் நீங்களும் இந்த தொற்காளைப்போல தான தருமங்களை செய்யமறவாதிருங்கள். அப்பொழுது தேவசமாதானம் உங்களை ஆட்கொள்ளும்.

**ஏழாவது, புண்ணிம் எதுவோ என குறிப்பிட்டுள்ளார்.** யார் செய்த புண்ணியமோ இவன் இன்று காப்பாற்றப்பட்டான் என்று சொல்ல கேள்விப்படுகிறோம். மூதாதையார் செய்த நன்மை அவர்களுடைய சந்ததிக்கு கிடைத்திருக்கிறது என்று சொல்வார்கள். நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும் நன்மைசெய்யவேண்டும். அதுவே வேதாகமத்தின் போதனையாக இருக்கிறது. நல்ல சமாரியனைப் பற்றிய போதனையை சபைகளில் போதகர் பிரசங்கங்களில் குறிப்பிடுவதை கேள்விப்பட்டிருப்பீர்கள். குற்றுயிராக கிடந்த மனிதனைக் கண்டு "கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான்" (லூக்.10:34). இந்த சமாரியனுக்கு அவன் உறவினன் அல்ல. வழியிலே அவனைக் கண்டு அவன்மீது மனதுருகி முதலுதவி சிகிச்சை செய்து தன்னுடைய சுயவாகனத்தில் அவனை ஏற்றிக்கொண்டு, சத்திரம் அல்லது அப்பொழுது இருந்த தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்று இவனைக் கவனித்துக்கொள்ளுங்கள் ஏதாவது செலவானால் அதை நான் திரும்பி வரும்போது கொடுக்கிறேன் என்று சொல்லி தன்னுடைய பயணத்தை தொடர்ந்தான். இவன் செய்தது புண்ணியம் இந்த புண்ணியத்தை நீங்களும் நானும் செய்யும்போது தேவன் நம்மோடிருப்பார். இந்த உலகத்திலே எத்தனையோ போராட்டங்களில் தவித்துக்கொண்டிருக்கும் அநேக குடும்பங்களைப் பார்க்கிறோம். அவர்களுக்கு நம்மால் உதவி செய்யமுடியும் ஆனால் உதவி செய்ய யோசிக்கிறோம். குற்றுயிராக கிடந்த மனிதனைப் பார்த்து சமாரியன் யோசித்திருந்தால் அவன் காப்பாற்றப்பட்டிருப்பானா? அன்பு நேயரே, உனக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக புண்ணியம் செய். மற்றவர்களுக்காக அல்ல. உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடிருப்பதற்காக!

**எட்டாவது, புகழ் எதுவோ என குறிப்பிட்டுள்ளார்.** புகழ் என்றால் விரும்பாதவர்களே இல்லை என்று சொல்லலாம். உலகப்பிரகாரமான புகழ்ச்சியை அநேகர் விரும்புகின்றனர். அந்தவிதமான புகழ்ச்சி நிலையானது அல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதின புத்தகத்தில் ஒரு புகழ்ச்சியை குறிப்பிடுகிறார்; அது என்னவென்றால்; "அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்கவேண்டுமானால், நன்மைசெய், அதினாலே உனக்குப் புகழ்ச்சி உண்டாகும்" என்கிறார் (ரோம.13:3). ஒருவன் நன்மைசெய்யும்போது அவனை அநேகர் நோக்கிப் பார்ப்பார்கள். அதிகாரங்களும் அவனை நோக்கிப் பார்க்கும். நன்மைசெய்யும்போது எந்த அதிகாரமும் ஒருவன் செய்யும் நன்மையை தடுக்காது ஏனெனில் அப்படி தடுக்கும்போது அநேகருக்கு அவர்கள் பதில் சொல்லவேண்டி வரும். ஆகையால் அதிகாரங்களுக்கு பயப்படாதிருக்கவேண்டுமானால் வேதம் சொல்லுகிறபடி நன்மைசெய்யக்கடவோம். அப்பொழுது அதினாலே நமக்கு புகழ்ச்சியுண்டாகும். இந்தவிதமான புகழ்ச்சி நன்மையினாலுண்டாகும் புகழ்ச்சியாக இருக்கிறது.

அன்பானவர்களே, தேவன் நம்மோடிருக்க எட்டு விதமான காரியங்களை நாம் கைக்கொள்ளவேண்டும் என தியானித்தோம். இயேசுவானவர் பன்னிரெண்டு சீஷரோடு இருந்தபோது அவர்கள் அநேக அற்புதங்களையும் அதிசயங்களையும் கண்டார்கள் மூன்றரை ஆண்டுகள் அற்புதரோடிருந்த நாட்கள் அவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்திருக்கும். நாம் இயேசுவை அறிந்து கொண்ட நாள் முதல் அவரும் பிதாவாகிய தேவனும் நம்மோடிருந்தால் அது எத்தனை ஆசீர்வாதமாக இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

**மேலும் சமாதானத்தின் தேவன் நம்மோடிருக்க நாம் செய்யவேண்டுவதென்ன?**

பவுல் சொல்லுகிறார்; "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்". நாம் அநேக காரியங்களைக் குறித்து கற்றுக்கொள்ளுகிறோம், அதினாலே அநேக நன்மைகளை அடைந்திருக்கிறோம். மேலும் கேட்கிறோம், கண்கூடாக கண்டும் இருக்கிறோம். இவைகளை கற்றுக்கொண்ட நாம் மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்போம். நாம் அடைந்த நன்மைகளை மற்றவர்களும் அடைய உதவிடுவோம். நாம் கேட்டவைகளை கேட்டவைகளாகவே விட்டு விடாது, மற்றவர்களும் அவைகளைக்குறித்து கேள்விப்பட இடம் உண்டாக்குவோம். நாம் பார்த்தவைகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுவோம். அப்பொழுது சமாதானத்தின் தேவன் நம்மோடிருப்பார். "கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலைடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்ளோடேகூட இருப்பார்" (2கொரி.13:11). உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



விற்கிறார்களல்லவா, அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுவதில்லை. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது ஆகையால் பயப்படாதிருங்கள். அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் (லூக்.12:6,7).

மனதில் நியமித்தபடி கொடுப்பதென்பது மனஉற்சாகமாகக் கொடுப்பதற்கு வழிவகுக்கும் (2கொரி.9:7)

1. தேவனுக்குத் தேவைப்படும் கொடுத்தல் என்பது முன்பே மனப்பூர்மாய் திட்டமிட்டு ஒரு நோக்கத்தோடு கொடுப்பதாகும். ஏதோ எப்போதாவது ஏற்படுகிற உணர்வு அல்லது சாதாரணத் தீர்மானத்தினால் வருவதல்ல.

2. தேவனுடைய அன்பு மற்றும் நன்மைகளை கருத்திற்கொண்டு இருதயத்திலிருந்து கொடுப்பதாகும்.

3. நீங்கள் கொடுப்பதைத் திட்டமிடுங்கள். ஏதோ கையில்பட்டதை எடுத்து காணிக்கைத் தட்டு வரும்போது கொடுக்காதீர்கள்.

கொடுப்பதைத் திட்டமிடுவதே நீங்கள் உற்சாகமாய் கொடுப்பதற்குரிய திறவுகோலாகும்.

1. நீங்கள் "முறுமுறுப்பு அல்லது அவசியம்" இவற்றினிமித்தம் கொடுக்காமல் நீங்கள் முன்னமே எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று வைத்துவிட்டபடி கொடுங்கள்.

2. கொரிந்தியர்களுக்கு கொடுக்கும் விஷயத்தில் பவுல் இந்தவிதமான புத்திமதி சொல்கிறார்.

3. நான் வந்திருக்கும்போது பணம் சேர்க்குதல் இல்லாதபடிக்கு அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும் தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்துவைக்கக் கடவன் (1கொரி.16:2).

இந்தப் பகுதியில் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

எப்போது? வராத்தின் முதல் நாளில் கிரேக்க மொழியிலே உள்ளபடி ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும். இது ஆதித் திருச்சபை வாரத்தின் முதல் நாளிலே தொழுது கொள்ளும்படி நிச்சயமாகக் கூடி வருவதை பழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிவிக்கிறது.

யார்? உங்களில் ஒவ்வொருவரும் சவுரியவான்கள் மட்டுமல்ல வயதானவர்கள், கடனில்லாதவர்கள் மற்றுமுள்ளோர்.

என்ன? எதையாகிலும் சேர்த்து உங்கள் கஜானாவில் வையுங்கள். அவனவன் சம்பாதித்ததின் அளவின்படி அதாவது நம்மிடத்தில் உள்ள பலன்களில் இருந்து.

ஏன்? நான் வரும்போது பணம் சேர்க்குதலில்லாதபடிக்கு அப்படியென்றால் போதுமான அந்தப் பணம் சபைக்கு இருக்கும் தேவைகளை சந்திக்கும்படியாக.

**-தொடரும்**




**தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவோம்!**

**ஒருவருக்கு ஒரு நாளைக்கு குடிக்க, குளிக்க, சமைக்க, துணிகளை துவைக்க 50 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது.**

குறித்து விளையாடும் விளையாட்டுகள், பரீசுச்சீட்டு விற்பது, மற்றும்பல வழிகளில் பணம் சேர்க்கின்றனர். இப்படிப்பட்ட காரியங்கள் சரியென்று ஆதரிக்கும் சபைகள் பணத்தின் பின் சென்று எப்படியும் அதை அடையலாம் என்று நம்புவார்கள் இப்படிக் கொடுப்பது உற்சாகமாய்க் கொடுப்பதாகாது.

2 முறுமுறுப்புடன் கடமை என்ற உணர்வோடு கொடுப்பது அல்லது அதன்மீது இச்சையுடன் கொடுப்பது, அப்படிப்பட்ட கொடை ஆதாயத்தை எதிர்பார்த்து கொடுக்கப்படுவது (9:5).

இந்த சந்தர்ப்பத்தில் பவுல் சகோதரர்கள் வருமுன் கொடுக்கவேண்டியவைகளைக் கொடுக்கும்படி உற்சாகப்படுத்துகின்றார் ஏனென்றால், அவர்கள் காத்திருந்து செய்தால் உற்சாகமாய்ச் செய்யாமல் ஏதோ கடனுக்கு மற்றவர்களின் எதிர்பார்ப்பை திருப்திப்படுத்தக் கொடுத்தது போலாகும் என்பதால் அவ்வாறு அவர்கள் கொடுப்பது ஒரு சமூக நெருக்கடியால்தான். அது தேவனுக்கு பிரியமாயிருக்காது.

கிறிஸ்தவர்கள் கொடுப்பது என்பதைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியவர், மக்கள் உதாரத்துவமாக அல்லது தேவனை நேசிப்பதனால் அல்லது நன்றியுணர்வுடன் கொடுப்பதற்கு பதில், அவர்கள் ஒரு மழலையர் பள்ளி நிகழ்ச்சி நடத்த அல்லது கட்டிடம் கட்டக் கொடுக்கிறார்கள் என்றார். இது நுகர்வோர் மனப்பான்மை வேறு வார்த்தைகளில் இதனால் நான் என்ன பெரிதாகப் பெற்றுக்கொள்ளப்போகிறேன்? என்ற சிந்தையுடன் கொடுப்பது.

சபைகளும், சுவிசேஷகர்களும் அடிக்கடி தங்கள் பேராசையை அடைய முயற்சிப்பார்கள். நீங்கள் கொடுப்பதற்கு மேல் பெற்றுக்கொள்வீர்கள். உங்களுக்கு பெரிய கடன்கள் இருந்தால், நீங்கள் விதையாகப் பணத்தைக் கொடுங்கள் நீண்ட காலமாகுமுன் பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

தேவன் உற்சாகமாய் கொடுக்கிறவர்களில் பிரியமாயிருக்கிறபடியால் தேவன் அப்படிப்பட்டவனை காத்து அவன் தேவைகளைப் பூர்த்திசெய்வார் என்பதில் நாம் நிச்சயமுள்ளவர்களாயிருக்கலாம்.

1. சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான் தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.

கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார். பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான். அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர் (சங்.41:1,2).

2 கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.

உன்டத்திலிருந்து தோன்றினவர்கள் பூர்வ முதல் பாழாய்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள். தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள் மேல் நீ கட்டுவாய். திறப்பானதை அடைக்கிறவன் என்றும் குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துவான் என்றும் நீ பெயர் பெறுவாய் (ஏசா.58:11,12).

3. மத்தேயு 6:30,33

4. இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை



# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

-J.C.Choate



பாடம் -6

கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலையும் நன்றியையும் கூறிக்கொள்கிறேன்.

உலகத்தில் அநேக பாவங்கள் உள்ளன, மனிதன் எல்லாவற்றிற்காகவும் குற்ற உணர்வுள்ளவனாயிருக்கிறான். யாரோ ஒருவன் மட்டும் பாவங்களைச் செய்வதில்லை, ஆனால் ஒவ்வொருவரும் இவைகளில் ஏதோ சிலவற்றை செய்கின்றனர். ஆனபடியினால் எல்லாரும் பாவஞ்செய்கின்றனர், எனவே எல்லாருக்கும் இரட்சிப்பு அவசியமாயிருக்கிறது அல்லது அவர்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு தேவையாயிருக்கிறது. பழைய மனிதனின் பாவத்தை களைந்துபோட்டு கிறிஸ்துவுக்குள் புதிய மனிதனை எப்படித் தரித்துக்கொள்ளுவது என்பதை உங்களுக்குக் காண்பிப்பது எங்களுடைய நோக்கமாயிருக்கிறது.

மனிதனுடைய எல்லா பாவங்களிலும், கொலை அல்லது ஒரு மனிதனை விரோதத்தினால் கொன்றுபோடுவதைக் காட்டிலும் அதிக கொடூரமானது வேறொன்றும் இல்லை. ஆனபடியினால், நம்முடைய இந்த பாடத்தில் நாம் கொலை என்ற பாவத்தைப் பற்றி இப்போது படிக்கவிரும்புகிறோம்.

நான் நம்புகிறேன், நான் மற்ற மனிதனை கொலை செய்திருக்கிற எவனொருவனைப் பற்றியும் நான் பேசவில்லை, ஆனால் நேர்மையான காரியத்தைச் செய்து கொண்டிருக்கலாம். நான் அப்படிச் செய்வேனென்றால் உறுதியாக உங்களுடைய நன்மைக்கென்று இதைக் கூறவேண்டியவனாயிருக்கிறேன். ஆனால் இந்தப் பாடம் இந்த பாவத்தை ஒருபோதும் செய்யாத உங்கள் யாவருக் காகவும் வடிவமைக்கப்பட்டது. நாம் இது குறித்து வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்ற விழிப்புணர்வைப் பெறும்படிக்கு விவாதிக்கப்போகிறோம். மேலும் அதன்படி செய்யப்போகிறோம். இது நமக்கு மரியாதைக்குரிய வாழ்வுக்கென்று உதவிசெய்ய வேண்டும். மேலும், இப்படிப்பட்டவை ஒருபோதும் குற்ற உணர்வை உருவாக்கக் கூடாது என ஜெபிக்கிறேன்.

கொலை செய்தல் அல்லது விரோதத்தினால் கொன்று போடுதல் போன்ற செயல்களுக்கு பல காரணங்கள் இருக்கிறது. சிலர் பணத்திற்காக ஏனென்றால் பொறாமையினிமித்தம், பழிவாங்கத் தேடுதலினிமித்தம், வெறுத்தலினிமித்தம், தொடர்ச்சியான வாக்குவாதத்தினிமித்தம், குடிப்பதற்குப் பழகி அப்படியே ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாக பட்டியல் கூடிக்கொண்டே செல்லுவதினால் கொலை செய்கின்றனர்.

வேதாகமம், ஒரு மனிதன் கோபம் ஏற்பட்டபடியால் தன் சொந்த சகோதரனையே கொலை செய்த முதல் கொலையைப் பற்றி நமக்குக் கூறுகிறது. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இந்த இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள் என்பது

நமக்குத்தெரியும். இந்த வேதவாக்கியம் தொடர்ந்து, "பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் கர்த்தர் அங்கிகரித்தார். காயீனையும் அவன் காணிக்கைகளையும் அவர் அங்கிகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி வேறுபட்டது? நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார். காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான். கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்; அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான். அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது. இப்பொழுதும் உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொள்ளத் தன் வாயைத் திறந்த இந்தப்பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போதும், அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார். அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது. இன்று என்னை இந்த தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி; காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப்போட்டார்" (ஆதி.4:2-16)என கூறுகிறது.

எபிரெயர்11:4-ல் நாம் "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான். அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" இவ்வாறு வாசிக்கிறோம். இந்தக் கூற்றிலிருந்து தேவன் ஆபேல் மற்றும் காயீனுடன் அவர்கள் ஏறெடுத்த பலிகளின் தன்மையைக் குறித்து பேசியிருக்கிறார் என முடிவுக்கு வரமுடிகிறது.

**-தொடரும்**

✦ கேரளா மீட்பிற்காக...
✦ கேரளாவுக்கு உதவி செய்தவர்களுக்காக...
✦ கேரளாவில் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள கூட்டத்திற்காக...


ஜெபியுங்கள்





## கொடுத்தலுக்கான விதிமுறைகள்
## Principles of Giving
பாடம் - 29

*-Jerry*




2கொரிந்தியர் 9:6-11

1.தொழுகையில் மிக முக்கியமானதொரு பகுதியை நாம் இப்பொழுது முடித்துள்ளோம். அநேகமாக கர்த்தருடைய பந்தி மிக முக்கியமானதென்று நினைப்போம்.

2. ஆனால் கொடுப்பதும்கூட தொழுகையின் முக்கியமானதொரு பகுதிதான். இந்தப் பாடம் நாம் அடிக்கடி பேச விருப்பப்படாத ஒன்று. ஆனால் அவ்வப்போது மற்ற எல்லாப் பாடங்களையும் போல இதுவும் கலந்து பேசப்படவேண்டும்.

3. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்துக்கு எப்படி முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அப்படியே கொடுத்தலைக் குறித்த தேவனுடைய திட்டத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வேதாகமத்தில் கொடுத்தலைக் குறித்து சொல்லப்பட்ட அளவு கேட்டல், விசுவாசம், மனந்திரும்புதல் அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை விட அதிகம் என்று சொல்லப்பட்டுள்ளது.

4. ஆனால் ஆசீர்வதிக்கப்படும்படி நாம் தேவனுடைய வழிகாட்டுதலைக் கடைபிடிக்க வேண்டும். தேவனுக்கு கொடுக்கப்படும் எல்லா பணத்தையும் அவர் ஏற்றுக்கொள்வதில்லை.

5. உற்சாகமாய்க் கொடுக்கிறவர்களைத் தேவன் நேசிக்கிறார் (2கொரி.9:7) நாம் எப்படி உற்சாகமாய்க் கொடுக்கிறவர்களாக மாற முடியும் (2கொரி.9:6-11).

தேவன் உற்சாகமாய் கொடுக்கிறவர்களை நேசிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

**நாம் எப்படியெல்லாம் கொடுக்கக்கூடாது...**

1. முறுமுறுப்போடு அதாவது துக்கத்தோடு அல்லது வருத்தத்தோடு காணிக்கைத் தட்டில் போடும் போது நாம் ஏமாற்றப்படுகிறோம் என்ற உணர்வோடு அல்லது கொள்ளையாடப்படுகிறோம் என்றெல்லாம் சிந்திக்கக்கூடாது. சரியான ஆவியுடன் கொடுக்கப்படும் காணிக்கைகளையே எப்போதும் தேவன் விரும்புகிறார்.

2. அவசியத்தின் பொருட்டு அதாவது கட்டாயமாய் கொடுக்கச் செய்வது. (9:7) கொடுத்தல் என்பது ஒருவர் சிரமத்தோடு கொடுக்கவேண்டிய ஒன்றாகிவிடுகிறது.

நம்முடைய காணிக்கை ஏதோ செலுத்தவேண்டிய இன்னுமொரு கடனா? இந்த விதமான நோக்கத்தோடு சந்தோஷமாய்க் கொடுக்க இயலாது. கடன்களுக்காக கொடுப்பது எனக்கு விருப்பமில்லை.

சில சபையார் தங்கள் அங்கத்தினர்களை அவர்கள் வாக்களித்ததைக் கொடுக்கும்படி நெருக்குகின்றனர். உங்களுடைய வருடக்கணக்கில் பாக்கியுள்ள பணத்தை அனுப்புங்கள். இப்படிப்பட்டது தேவையில்லாமல் கொடுக்கப்படுவது.

1. சபைகள் வெகுமானப் பொருட்களை விற்பதன் மூலம், எண்களைக்

நம்மை கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கும் போது, தேவன் நமது வாழ்க்கையை மாற்றுகிறார் மேலும் நாம் செய்கிற ஒவ்வொன்றையும் மற்றவர்கள் பார்வைக்கு அழகுள்ளதாய் உருவாக்குகிறார்.

பவுல் 2கொரி.5:17-ல் இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்று எழுதினார். நாம் ஒருவேளை நமது சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை கவனிக்காதவர்களாய் இருக்கலாம் ஏனென்றால் நாம் நம்மை வழக்கமான அடிப்படையில் மதிப்பிடுகின்றோம், ஆனால் மற்றவர்கள் நம்மிலுள்ள மாற்றங்களை கவனிப்பார்கள். அவர்கள் கிறிஸ்துவைப் போல வாழ்கின்றோம் என்பதை அறிவார்கள், அது நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் மதிக்கிறது.

சில ஜனங்கள் வியாபாரம் போன்ற தங்களுடைய அலுவல்களில் நடைமுறை வாழ்க்கையில் பொய்பேசுகின்றனர், ஆனால் கிறிஸ்தவர்கள் இப்படிச்செய்யமாட்டார்கள்

மேலும் கிறிஸ்தவர்கள் தங்கள் அலுவல் பொறுப்புகளில் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கிறார்கள் ஏனென்றால் தாங்கள் கர்த்தருக்காக உழைக்கின்றனர் என்பதை அவர்கள் அறிவார்கள். கொலோ.3:22 **"நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்" என்று சொல்லுகிறது.**

நீ என்ன செய்கிறாய் என்று கவலைகொள்ளாமல் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுதல் உன்னுடைய கடமைகளை வெற்றியுடன் செய்து நிறைவேற்ற உனக்கு உதவிசெய்யும். நாம் எவ்விடத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளோம் என்று கவலைப்படாமல் கர்த்தருக்கு ஊழியஞ்செய்வதில் நம்முடைய எல்லா உண்மையையும் ஊக்கமான முயற்சியையும் தரித்துக்கொண்டவர்களாய் இருக்கும்போது அது ஒரு உண்மையான வித்தியாசத்தை உருவாக்கும்.

**- தொடரும்**

**தெரிந்துகொள்வோம்**

## விசித்திர தூக்கங்கள்!

*-K.R.K.Ravi Asir*

▶ சிலவகை ஐரோப்பியக்கிளிகள் வெளவால்போலவே கால்களால் மேலே அதன் மார்பை பார்த்தவாறு ஒய்யாரமாகத்தூங்கும்.

▶ பாம்புவகையைச் சேர்ந்தவை அனைத்தும் உடலைக்கடிகார ஸ்பிரிங் போல வளைத்துக்கொண்டு தூங்கும். பாம்புகள் தூங்கும்போது திறந்தவண்ணமே இருக்கும்.

▶ பெரும்பாலான பறவைகள் பகலில் விழித்து இரவில் உறங்கும் வழக்கம் கொண்டிருந்தாலும் ஆந்தை இனப் பறவைகள் பகலில் தூங்கி இரவில் இரைதேடும் பணியைத் தொடர்கிறது.



பெண்கள் பகுதி

## ஒருவருடைய குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கும் நல்லொழுக்கப்படுத்துவதற்குமான தீர்மானமில்லாமை

## The Decision Not Train and Discipline one`s Children

***-Betty***



இனங்களின் விருத்தி என்பது இயற்கையான ஒன்றும் உயிர்வாழ்வனவற்றின் முக்கியப் பகுதியாகவுமிருக்கிறது. இதைப் பற்றி சிறிது ஆராய்ந்து பேசுவது அவசியம். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட முதல் கட்டளை, "நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி....." (ஆதி.1:28) என்பதாகும்.

ஜனங்கள் பிள்ளைகளைப் பெற்றிருக்கின்றனர். சில நேரங்களில் பெற்றோர்கள் இருவரும் கவனத்துடன் நிகழ்ச்சியின் நேரத்தைத் திட்டமிட்டு, எண்ணிக்கையுள்ள பிள்ளைகளுக்கு கொடுக்கவும், தங்கள் பிள்ளைகளின் சரீரம், மனவெழுச்சி, மற்றும் ஆவிக்குரிய தேவைகளில் கவனம் செலுத்தும்படிக்கும் அவர்கள் ஆயத்தம் செய்ய வேண்டுமெனவும் அறிந்திருக்கிறார்கள்.

ஆனால் பெற்றோர்களின் சார்பில் சம்பந்தமில்லாமலும் முன் எச்சரிக்கையில்லாமலும் உலகில் அடிக்கடி குழந்தைகள் பிறக்கின்றன. அவர்கள், சிறிதளவு உணவினைப் பெற்றுக்கொண்டு பசியின் விளிம்பிலும் அல்லது கல்வி இல்லாமலும் வாழ்கின்றனர். மேலும், இவ்வுலகத்திலும்கூட அவர்கள் முன்னேற்றத்திற்கான தங்களுடைய விதியில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர், வரப்போகிற ஆவிக்குரிய நித்திய உலகில் மிகக் குறைவாகவே காணப்படுவார்கள்.

பெற்றோர்கள் உலகத்திற்குள் தாங்கள் கொண்டுவந்த உதவியற்ற சிறுபிள்ளைகளுக்கானப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டும். தீமோத்தேயு5:8, "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" எனக் கூறுகிறது.

ஆனால் பிள்ளைகளுடைய சரீரத் தேவைகளை மட்டும் பூர்த்திசெய்வதைக் காட்டிலும் பிள்ளைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதில் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றன. தொடர்ச்சியான போதனையும் பயிற்சியும் அவசியம், ஞானத்துடனும் அன்புடனும் உருவாக்கப்படவேண்டியதும், வயதான ஒருவருடைய தரிசனம். மேலும் குழந்தையாயிருக்கின்றவனை களிமண்ணிலிருந்து உருவாகின்ற ஒன்றைப் போலவுமிருக்க வேண்டிய ஒன்றாகக் காட்டுகிறது.

நீதிமொழிகள் 22:6, "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" என வாக்களிக்கிறது.

ஆனால் இளம் பெற்றோர்கள் அதிகமாக அடிக்கடி குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதில்லை! குழந்தைகள் வடிவமைக்கப்படுவதும், பயிற்றுவிக்கப்படுவதும் பெற்றோர்களால் தொடர்ந்து முன்னோக்கி நடைபெற வேண்டியதாயிருக்கிறது, மேலும் அவர்கள் அவர்களை வளர்ச்சியடையப்பண்ணுவதில் ஒருபோதும் அமைதியாயிருக்கக் கூடாது. ஒருவேளை அவர்கள் என்ன செய்யவேண்டுமென உறுதியில்லாதவர்களாய் இருக்கலாம். ஒருவேளை அவர்கள் மிகவும் கடுமையாயிருப்பதில் அச்சம் கொள்ளலாம்,

தங்களுடைய இளங்குழந்தையை இழிவுபடுத்துவதாகத் தோன்றலாம். ஒருவேளை அவர்கள் அவன் இப்போது புரிந்து கொள்ளுவதற்கு மிகவும் சிறியவனாயிருக்கிறான், மேலும் அவன் பெரியவனாகும் போது எப்படி நடந்துகொள்ளவேண்டுமென அவனுக்கு தாங்கள் போதித்துக் கொள்ளலாம் என தவறான தீர்மானத்தை உருவாக்கினவர்களாய் இருக்கலாம்.

இப்படிக் காத்திருப்பது பெற்றோரின் வேலையை மிக அதிகமாகக் கடினப்படுத்தும். ஒரு முரட்டாட்டம் பண்ணும், கூச்சலிடும், ஒழுங்கீனமான குழந்தை பெற்றோர்களுக்கு வெறுப்பூட்டுகிற குழந்தையாகயிருக்கும், வழக்கமாக பார்ப்பவர்களும் அவனுடைய நடத்தையை விரும்பமாட்டார்கள். மற்றபெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் மேல் இவனுடைய செல்வாக்கிருப்பதைக்குறித்து தங்களுடைய குழந்தைகள் இந்த தொந்தரவுக்குள்ளாகிவிடுவார்களென ஆத்திரமடையலாம். குழந்தை வளர்ந்து வருகையில், அவனுடைய நடவடிக்கை மோசமாகயிருந்தால் மற்றவர்கள் அவனோடிருக்க விரும்பமாட்டார்கள், அவன் அவர்களுடைய மனநிலையை அறிந்து, அதனால் வேதனையடைவான், இருந்தபோதும் அவன் மற்றவர்கள் தன்னை ஒதுக்குவதற்கான காரணத்தைப்புரிந்து கொள்ளாமலிருக்கலாம். இது சின்ன தொந்தரவு கொடுக்கிறவனாக வளர்ந்து வருவதிலிருந்து தங்கள் பிள்ளைகளை காப்பாற்றுவது பெற்றோருடைய கடமையாகயிருக்கிறது. அந்த குழந்தை 'குற்றஞ்சாட்டப்பட்டு' புறக்கணிக்கப்பட்டவனாயிருந்தாலும், இது அவனை நேசிக்கப்படாத, அருவருப்பான ஒருவனாக வளர அனுமதித்த பெற்றோரையே சாரும்.

உங்களுடைய குழந்தையைப் பயிற்றுவிப்பதில் கண்டிப்பில்லாத பழக்கத்தைக் கொண்டிருந்தீர்களானால், உங்களுடைய தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். பெற்றோராக நீங்கள் செய்கின்ற வேலை உங்கள் வாழ்வில் மிக முக்கியமானதாக இருக்கிறது! இதை அற்பமாய் எண்ணாதீர்கள் அல்லது அதற்கு அதிகமான நாட்கள் உண்டு என நினைக்காதீர்கள். பல பாடங்களினூடே நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது ஒவ்வொரு நாளினுடைய மிகமுக்கியமான தேவையாகும். நீங்கள் மதிப்புமிகுந்த சின்ன ஆத்துமாவை உலகிற்கு ஆசீர்வாதமாயிருக்கும்படிக்கு வடிவமைப்பதற்கு குறைந்த வருடங்களையே பெற்றுள்ளீர்கள்.

நீங்கள் வருங்கால ஒரு தகப்பனை அல்லது ஒரு தாயைப் பயிற்றுவிக்கின்றீர்கள் என்பதை நினைக்க வேண்டும், மேலும் நீங்கள் உங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் முறையே அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கு அடித்தளமாயிருக்கும்.

இவைகள் உங்கள் மனதில் கொள்ள வேண்டிய பயிற்றுவிப்பதற்கான வழிமுறைகள்:

▶ வேண்டுகோலுக்கு உத்தரவு சொல்லும் முன் அல்லது ஆம் அல்லது இல்லை என சொல்லும் முன், அதை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் செய்யப்போகிற காரியம் போதுமான அளவுக்கு முக்கியமானதாக இருந்தால் நின்று நிதானியுங்கள்.

▶ ஆனால் நீங்கள் சிலவற்றைக்கூறினால், அதை நடைமுறைக்குக் கொண்டுவாருங்கள். இதுவே உங்கள் குழந்தை ஒழுக்கத்தின் பாதுகாப்பான எல்லைகளைக் கற்றுக் கொள்ள ஏதுவான வழியாகும். நீங்கள் அவனுடைய வழிகாட்டி, மேலும் நீங்கள் உங்களுடைய பொறுப்பினைக்குறித்து ஆழ்ந்த யோசனையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவன் உட்காரவோ அல்லது மௌனமாயிருக்கவோ



## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

## Evangelizing Our Friends -TVOTI



**கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தல் நீங்கள் எவ்விடத்தில் இருந்தும் உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறீர்கள்**

**பிரிவு 1, பாடம் -6**

Commitment to Christ Anywhere you are Helps your Friends

**மனப்பாட வசனம்:**

**(1கொரிந்தியர் 10:31 சூமுதுஏ) "ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்"**

**பிரிவு 1, பாடம் -6**

**முன்னுரை:**

வாழ்க்கையானது பல்வேறு வகையான அலுவல்களைக் கொண்டுள்ளது, ஒரு நபர் ஒரு மருத்துவராக, உதவியாளராக அல்லது மற்ற எந்த அலுவல்களையும் உடையவராக இருக்கலாம். கிறிஸ்தவன் எந்த அலுவலையும் செய்ய முடியவில்லையென்றால் அது பாவமாகும் (ஒரு அடிமை வியாபாரியைப் போல), அவன் தெரிந்தெடுத்துக் கொள்ள அநேக அலுவல்கள் உள்ளன. தேவன் வாழ்க்கை நடத்துவதற்காக உத்தமனாக வேலை செய்வதை ஆசீர்வதித்திருக்கிறார். தேவன் நம்மிடத்தில் கேட்கிற ஒரே ஒரு காரியம், நாம் செய்கிற வேலையைக் குறித்து எண்ணாமல் ஒரு கிறிஸ்தவனாக நாம் வாழ்தல் வேண்டுமென்பதே ஆகும். நாம் வாழவும் காரியங்களைச் செய்து நிறைவேற்றவும் வேலை நல்லது. நீங்கள் உங்கள் பணியை முழுமையாக கடினமாக செய்து நிறைவேற்றியதற்கு யாராவது உங்களுக்குப் பரிசளித்திருக்கிறார்களா? மக்கள் நம்முடைய ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்வினை காண்கின்றனர், பாராட்டுகின்றனர்! நம்முடைய அன்றாட பணிகளுக்கென நமது அர்ப்பணிப்பானது மற்றவர்களின் மனதில் ஒரு நல்ல அபிப்ராயத்தை ஏற்படுத்துகிறது. கிறிஸ்தவன் செய்கிற இப்பேர்பட்ட ஒவ்வொரு காரியமும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யப்படுகிறது எனவே அவன் ஜாக்கிரதையோடு வேலைசெய்கிறான். எபேசியர்6:6 **"மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்"** என்பதற்கிணங்க நாம் செய்ய வேண்டும்.

**வேதாகமம் என்ன சொல்கிறது?**

சிலவேளைகளில் நம்மை நாமே, "நான் என்ன செய்ய முடியும்? நான் சிலரைப் போல் பெரிய ஆள் இல்லை, என்னால் பொது இடத்தில் பேச முடியாது" என்று கேட்டுக்கொள்கிறோம். கிறிஸ்துவுக்கு உங்களுடைய ஒப்புக்கொடுத்தல் - நீங்கள் எங்கிருந்தாலும் - உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறீர்கள் என்பதே இக்கேள்விக்கு தேவனுடைய பதிலாயிருக்கிறது. இது எப்படி இருக்க முடியும்? நாம்

வேண்டிக்கொள்ளுவோம். "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது ………" (கொரி.7:10) என வேதம் கூறுகிறது.

ராஜமேன்மையைப் பெற்றுள்ள நாம், சிலர் கவலையற்றவர்களாயிருப்பது போல நாமும் இல்லாதபடி நம்முடைய குடும்பத்தாரை, நம் ஜனத்தை அழிவிலிருந்து காப்பாற்றி அவர்களுக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், விடுதலையும் உண்டாக ஆத்தும பாரங்கொண்டு நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமாயிருக்கிறவரை நோக்கி, மன்றாடுவோம். வேதம் நம்மில் எதிர்பார்க்கிறபடி புத்தியாய் கிரியை நடப்பிப்போம். நம்முடைய விசுவாசத்தின் கிரியைகளைக் கர்த்தர் பார்த்து நம்முடைய குடும்பம் கட்டப்படவும் கிறிஸ்துவின் சபையாகிய பேழையில் குடும்பத்தார் அனைவரும் சேர்க்கப்பட்டு நித்திய அழிவிலிருந்து காக்கப்படவும் உதவிசெய்வாராக!.

## பொது அறிவு சோதனை

1. முதன் முதலாக எய்ட்ஸ் கண்டு பிடிக்கப்பட்ட ஆண்டு எது?
   அ)1981 ஆ)1982 இ)1980
2. அதிகப்படியான கொலஸ்ட்ராலின் விளைவு என்ன?
   அ)காச நோய் ஆ)அதிரோஸ்லிராஸிஸ் நோய் இ)வாத நோய்
3. தண்டி யாத்திரையுடன் தொடர்புடையது எது?
   அ)ஒத்துழையாமை இயக்கம் ஆ)வெள்ளையனே வெளியேறு இ)சட்ட மறுப்பு இயக்கம்
4. ஜப்பானில் எறியப்பட்ட முதல் அணுகுண்டின் பெயர் என்ன?
   அ)லிட்டில் பாய் ஆ)குட்– பை இ)பேபி
5. உலக வங்கி இருக்கும் இடம் எது?
   அ)நியூயார்க் ஆ)வாஷிங்டன் இ)இங்கிலாந்து

**விடைகள்:1.1981 2.அதிரோஸ்லிராஸிஸ் நோய் 3.சட்ட மறுப்பு இயக்கம் 4.லிட்டில் பாய் 5.வாஷிங்டன்**

**இலங்கை ஆசியசேவை SW 25 மேற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.15 மணி முதல் 5.30 வரை ஒலிபரப்பாகும்** The Word of Christ **ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில்** www.slbc.lk **இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

# நடப்புச்செய்திகள்

❒ கேரளாவில் கடந்த 8 ந்தேதி முதல் 18 ந்தேதி வரை 11 நாட்கள் பெய்த மழையால் வெள்ள சேத மதிப்பு ரூ35 ஆயிரம் கோடி நிதித்துறை கணக்கெடுப்பில் தகவல்.

❒ தொழில் அதிபர் விஜய் மல்லையா வங்கிகளில் ரூ9500 கோடி கடன் பெற்று திரும்ப செலுத்தாமல் லண்டனுக்கு தப்பி சென்றுவிட்டார். அவரை இந்தியாவுக்கு அழைத்து வர சி.பி.ஐ முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

❒ எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவையொட்டி 10 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை அனுபவித்த ஆயுள் தண்டனை கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தமிழக அரசு அறிவித்தது.



தேவையில்லையென்றால், அதைச் செய்யும்படி சொல்லாதீர்கள். ஆனால் நீங்கள் அதைச் செய்யும்படி சொன்னால், அதற்குக் கீழ்ப்படியாமலிருக்க அனுமதிக்காதீர்கள்.

▶ கீழ்ப்படிதலுக்கு பாராட்டுதலோடு, அன்போடு, ஏற்றுக்கொள்ளுதலோடு சன்மானம் கொடுங்கள். கீழ்ப்படியாமைக்கு வேறுபட்ட திருத்தத்தோடும் தண்டனையோடும் கைமாறுசெய்யுங்கள். அவைகள் இவ்விதமாக இருக்கலாம் (1) வாய்மொழி திருத்தம் (2) சில உபகாரங்கள் அல்லது பொம்மை போன்றவற்றிற்கு மறுப்பு தெரிவித்தல் (3) அவன் கீழ்ப்படியத் தீர்மானிக்கும் வரை நாற்காலியில் அமரச்செய்தல் அல்லது தனியாக ஓரிடத்தில் நிற்கச்செய்தல் (4) கட்டுப்பாடோடே கையினால் அடித்தல் முறையில் சரீரப்பிரகாரமான தண்டனை அல்லது வேறு எந்தமுறையிலாவது உங்கள் குழந்தைகளைத் தண்டித்தல்.

▶ உங்களுடைய குழந்தையின் "கொச்சையான" கோமாளித்தனங்களைப் பார்த்து சிரிக்காதீர்கள் அவைகள் உண்மையாகவே கீழ்ப்படியாமையான செயல்கள். அவைகள் சரிசெய்யப்படவேண்டியவை. பெற்றோர்களின் ஒரு சிறிய முன் எச்சரிக்கை பல ஆபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு உதவும். ஒரு சிறுகுழந்தை தன்னைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்த பாட்டியின் முகத்தை அடித்துக் கொண்டேயிருந்த அந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அந்த முதியவள், அவள் ஒரு சின்ன குழந்தைதான் உண்மையாகவே அவள் தீங்கு செய்யவில்லை என அறிந்து கொண்டவளாய் சிரித்துக்கொண்டிருந்தாள். ஆனால் அந்தக் குழந்தையின் தகப்பன் வேகமாய் வந்து அக்குழந்தையின் கையைப்பிடித்து எந்த புன்முறுவலையும் காண்பிக்காது மிகவும் கண்டிப்பாக செய்யாதே எனக் கூறினார். மேலும் அவர் " நான் சிரித்தால்" "அவள் இது ஒரு விளையாட்டு என நினைப்பாள்" மேலும் இது மற்றவர்களை அடிப்பது அவளுக்கு சரியான செயலாகத் தோன்றும். அந்தச் செயலில் அவள் வளருவதை நான் விரும்பவில்லை, மேலும் அவள் அதைச் செய்யாதபடிக்கு காலஞ்சென்ற பிறகு நான் போதிக்கிறவனாக இருக்கவிரும்பவில்லை என்று விளக்கினார். எப்பேர்பட்ட ஞானமுடைவர் அவர்!

▶ குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு குழந்தையை ஆவிக்குரிய காரியத்திலும் தேவனோடு ஐக்கியங்கொள்ளவும் பயிற்றுவிக்கத் தொடங்குங்கள் நாள் முழுவதும் வாழ்வின் ஒவ்வொரு நாள் காரியங்களும் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்து வருகிற நம்முடைய அன்பின் தேவனுக்குரியது. அவனுக்கு வேதவாக்கியங்களைக் கற்றுக்கொடுங்கள், அவன் வேதபாடவகுப்புகளில் ஒழுங்காகப் பங்கேற்கிறானா எனக் கவனியுங்கள். இதுவே அவன் தேவன் மேல் தன் வாழ்வை அஸ்திபாரமிட்டு வளர்ச்சியடைவதற்கு அவனுடைய நினைவில் நீங்கள் உருவாக்குகிற இயல்பான அடித்தளமாகும். நீங்கள் அவனுடைய இருதயத்தில் இந்த சத்தியங்களை நிலைநாட்ட கொஞ்ச காலத்தையே பெற்றிருக்கிறீர்கள், எனவே தேவன் அவன் எவ்விதமான புயலைச்சந்தித்தாலும் வாழ்நாள் முழுவதும் அவனுடைய அடைக்கலமாயிருக்கிறார்.

அடிக்கடி, ஒரு குழந்தையைப் பயிற்றுவிப்பதில், ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான உலகத்திற்கிடையில் குழப்பங்கள் இருக்கும். ஞாயிற்றுக் கிழமையில் கிரிக்கெட் போட்டி அல்லது ஆராதனைக்குச் செல்லுவதை தெரிந்துகொள்ளுவதா என்ற குழப்பம் ஏற்படலாம். சமீபத்தில் ஒரு இளைஞன் தான் குழந்தையாயிருந்த போது ஆராதனையைப் பற்றி தன்னுடைய தகப்பனுடைய கண்டிப்பினையும் அவர்கள் ஒருபோதும் கூட்டத்திற்குக் காலதாமதமாய் செல்லக்கூடாது என்பதற்காக அவர்கள் தீட்டிய காலை நேரத்திட்டத்தைக் குறித்தும் கூட தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தான். இளைஞனாக, தன் விருப்பத்தின்படி

தீர்மானங்களை உருவாக்குகின்றவனாக, ''இப்போது என் தகப்பன் எனக்கு ஒரு ஆன்மீக உணவளிப்பவராக இருக்கிறார்'' என்று சொன்னான்.

நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஒழுக்கமும், கவனமுள்ள போதனையும் இப்போதைக்கு தேவையில்லை எனத் தீர்மானித்திருப்பீர்களானால், தயவுசெய்து இக்காரியங்கள் எல்லாவற்றையும் நன்கு யோசித்துப் பாருங்கள். ''எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்'' (எபி.12:11).

பெண்கள் பகுதி

# புத்தியுள்ள ஸ்திரீ

## A Wise Woman

*-Glory Arjunan*



ஒரு புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக்கட்டுவாள் என வேதம் கூறுகிறது. குடும்பமாகிய வீடு கட்டப்பட வேண்டுமானால் அது ஒரு புத்தியுள்ள ஸ்திரீயினால் மட்டுமே கூடும். அன்பு சகோதரியே, உங்கள் குடும்பம் எப்படியுள்ளது? என்ன வந்தாலும் அசைக்கப்படமுடியாத கன்மலை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட குடும்பமாக உள்ளதா? அல்லது இடிந்து சின்னாபின்னமாக கிடக்கும் ஒரு கட்டடத்தைப் போல் ஆளுக்கொரு பக்கமாக சிதறிப்போய் கணவன் ஒரு வழியிலும், மகன் இன்னொருவழியிலும் மகள் மற்றொரு வழியிலும் மனம் போல் வாழ்வு என நாட்களைக் கழிக்கின்ற குடும்பத்தைப்போலிருக்கிறதா? சகோதரியே, நம் குடும்பம் நோவாவின் குடும்பத்தைப் போல் ஒரே பேழையில் பயணம் செய்து நித்திய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதே தேவசித்தமாயிருக்கிறது.

அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் கூட தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டால் அத்துடன் திருப்தியடைந்தவர்களாகவோ அல்லது தன் குடும்ப அங்கத்தினர்கள் குறித்து கவலையற்றவர்களாகவோ இருந்து விடுகின்றனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தம் நம்மை பாவமறக்கழுவி சுத்திகரித்து நமக்கு ராஜமேன்மையைக் கொடுத்திருக்கிறது. ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' (1பேது.2:9) என வேதம் கூறுகிறது.

யூதர்கள் அழிவின் விளிம்பில் இருந்தபோது மொர்தெகாய் எஸ்தருக்கு அதைத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும், மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச் சொன்னான் (எஸ்.4:8). அன்று யூதர்களுக்கு நியமிக்கப்பட்டது சரீர அழிவு. அந்த அழிவிலிருந்து யூதர்கள் காக்கப்பட வேண்டுமென எஸ்தர் ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டியவளாக இருந்தாள். மேலும் மொர்தெகாய் எஸ்தருக்கு, ''நீ இந்தக்காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு



இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத்தெரியும், என்று சொல்லச் சொன்னான்'' (எஸ்.4:14).

ஆனால் இன்று, ''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது ..... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்'' (1தெச.1:7-10) என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரிகளே, அன்று அந்த புத்தியுள்ள எஸ்தர், நான் செத்தாலும் சாகிறேன் எனக் கூறி ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணி, மன்றாடி யூதருக்கு விடுதலையும், களிப்பும், மகிழ்ச்சியும் உண்டாகப்பண்ணினாள். யூதருக்கு வெளிச்சமும், விடுதலையும் உண்டாகும்படி ராஜமேன்மை அவளுக்குக் கிடைத்திருந்தது. இன்று நமக்கோ ஆவிக்குரிய ராஜமேன்மை கிடைத்துள்ளது. இந்த ராஜமேன்மை நம்முடைய குடும்பத்தாரின் வெளிச்சத்திற்கும், விடுதலைக்கும், மகிழ்ச்சிக்கும் காரணமாயிருக்கக் கூடாதா?. 1தெச.1:7-10-ல் கூறப்பட்டுள்ளபடி தேவனை அறியாத நம்முடைய குடும்பத்தாரை நித்திய அழிவிலிருந்து காப்பாற்ற நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமானவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவதும், மன்றாடுவதும் மிகவும் அவசியமல்லவா? அன்பு சகோதரியே, உங்கள் கணவனின் இரட்சிப்பைக்குறித்தும், பிள்ளைகளின் இரட்சிப்பைக் குறித்தும் கவலையற்றவர்களாய் இருக்க வேண்டாம். ஐயோ, இரட்சிப்பைக் குறித்து பேசினாலே வீட்டில் ரகளை தான் ஏற்படும் என்கிறீர்களா? தேவசமூகத்தில் தரித்திருந்து வேதாகமத்தின் மூலம் கர்த்தரிடத்திலிருந்து வரும் அறிவையும் புத்தியையும் பெற்றுக் கொண்டு குடும்பத்தைக் கட்ட ஆரம்பியுங்கள். உங்கள் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை உங்கள் கணவர் பார்த்து போதனையின்றி உங்கள் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார் (1பேது.3:1,2). தேவவசனம் தூஷிப்பப்படாதபடிக்கு உங்கள் புருஷரிடத்திலும், உங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவராகவும், தெளிந்த புத்தியுள்ளவராகவும், கற்புள்ளவராகவும், வீட்டில் தரித்திருக்கிறவராகவும், நல்லவராகவும், உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவராகவுமிருங்கள் (தீத்.2:4,5). இப்படி நடந்து கொள்ளும்போது தேவன் உங்களுக்கு உதவிசெய்வார். நீங்களும் புத்தியாய் உங்கள் குடும்பத்தை கிறிஸ்துவாகிய பேழையில் ஏறப்பண்ணுவீர்கள். எஸ்தரைப்போல துணிச்சல் கொண்டு, ''நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்'' (பிலி.4:6,7).

இதோ, கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார். ''...... கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' (2பேது.3:9). எனவே நம்முடைய குடும்பத்தைக் குறித்து பாரமுள்ளவர்களாய் தேவனை நோக்கி